மருமகளை அரிவாளால் வெட்ட முயன்ற மாமனாருக்கு வலை

கம்பம், ஏப். 25: கூடலூர் முத்துசாமி ஐயர் தெருவை சேர்ந்தவர் சினேகா (21). இவருக்கும் எம்ஜிஆர் காலனியை சேர்ந்த சேர்ந்த அழகேசன் (25) என்பவருக்கும் கடந்த 2020ம் ஆண்டு திருமணமானது. இந்நிலையில் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு உத்தமபாளையம் நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்றும் ஜீவானம்சம் வழக்கு நடைபெற்று வருகின்றன. ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தொடர்ந்த தால் சினேகா குடும்பத்தினரிடம் அழகேசன் தந்தை வனராஜ் அடிக்கடி பிரச்னை செய்து வந்ததாகவும், இதனால் முன்விரோதம் ஏற்பட்டு இருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில் கடந்த ஏப்.23ம் தேதி, வனராஜ் கம்பம்மெட்டு சாலை பிரிவில் உள்ள உரம் விற்பனை செய்யும் கடையில் வேலை பார்த்து வந்த சினேகாவிடம் என் மகனிடம் எப்படி ஜீவனாம்சம் கேட்கலாம் என கூறி தான் கொண்டு வந்த அரிவாளால் வெட்ட முயன்றார். உடனே கடையில் இருந்த சதிஷ்குமார் தடுக்கவே வனராஜ் அங்கிருந்து தப்பியோடிவிட்டார். இதுகுறித்து சினேகா கம்பம் வடக்கு போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார் இதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து வனராஜை தேடி வருகின்றனர்.

தேனி கல்லூரியில்

ட்ரோன் தொழில்நுட்ப மையம் துவக்கம்

▶ தேனி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் திருச்சி டிரான்சிஸ்டா டெக்னாலஜி நிறுவனத்துடன் எம்ஓயு ட்ரோன் தொழில்நுட்ப பயிற்சி வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ட்ரோன் தொழில்நுட்ப மையம் துவக்கப்பட்டது.

தேனி, ஏப்.25: தேனி நாடார் சரசுவதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் துறையில் ட்ரோன் தொழில் நுட்ப மைய துவக்க விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. விழாவிற்கு தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் தர்மராஜன், உபதலைவர் ஜீவகன், பொதுச் செயலாளர் எம். எம்.ஆனந்தவேல், பொருளாளர் ராமச்சந்திரன் மையத்தை துவக்கி வைத்தனர். கல்லூரி முதல்வர் மதளை சுந்தரம் வரவேற்றார். கல்லூரி செயலாளர் சோமசுந்தரம், இணை செயலாளர் சுப்ரமணி வாழ்த்தி பேசினர்.

இதில் திருச்சி டிரான்சிஸ்டா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் எம்ஓயு ட்ரோன் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

விழாவில் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர்கள், உறவின் முறை கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கல்லூரி துணை முதல்வர் சத்யா, இயந்திரவியல் துறைத் தலைவர் ராதாகிருஷ்ணன், விழா ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர்கள் நாகராஜன், சாந்தசீலன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

அமெரிக்கா சென்ற மூதாட்டி வீட்டில் நகை, பணம் திருட்டு

திண்டுக்கல், ஏப். 25: திண்டுக்கல் குடகனாறு இல்லம் பகுதியை சேர்ந்தவர் கதிரேசன். இவரது மனைவி சொர்ணம் (65). இவர்களுக்கு ஒரு மகள், ஒரு மகன் உள்ளனர். இவர்களுக்கு திருமணமாகி மகள் அமெரிக்காவிலும், மகன் நியூசிலாந்திலும் வசித்து வருகின்றனர். கணவர் சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டதால் சொர்ணம் மட்டும் அவரது வீட்டில் தனியாக வசித்து வந்தார். வீட்டு வேலைகளுக்காக 2 பெண்களை பணியில் அமர்த்தி இருந்தார். இந்நிலையில் சொர்ணம் கடந்த ஏப்.17ம் தேதி அமெரிக்காவில் உள்ள அவரது மகள் வீட்டிற்கு சென்றிருந்தார். இதற்கிடையே கடந்த ஏப்.21ம் தேதி செவ்வாய் கிழமை காலை வழக்கம் போல் வீட்டு வேலைகள் செய்வதற்காக வேலைக்கார பெண் வீட்டிற்கு வந்தார். அப்போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு இருந்ததை கண்டார். பின்னர் வீட்டிற்குள் சென்று பார்த்த போது வீட்டின் கீழ்ப்பகுதியில் உள்ள பீரோ மற்றும் மாடியில் உள்ள பீரோக்கள் உடைக்கப்பட்டு இருந்தன. மேலும் துணிகளும் சிதறி கிடந்தன. இதனால் அதிர்ச்சியடைந்த அந்த பெண் இதுபற்றி வீட்டின் உரிமையாளர் சொர்ணத்திற்கு தகவல் தெரிவிக்க, அவர் இதுகுறித்து திண்டுக்கல் நகர் தெற்கு போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினர். மேலும் அப்பகுதிகளில் உள்ள சிசிடிவிக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர். அதில், நள்ளிரவு நேரத்தில் ஒரு காரில் வந்து இறங்கிய 2 பேர் பூட்டியிருந்த வீட்டின் கதவை உடைத்து உள்ளே செல்கின்றனர். தொடர்ந்து அங்கு வீட்டில் வைக்கப்பட்டிருந்த கடப்பாரையை வைத்து பீரோக்களை உடைத்து 4 பைகளை எடுத்து கொண்டு காரில் தப்பி சென்றதும் பதிவாகியுள்ளது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்மநபர்களை தேடி வருகின்றனர்.

சின்னமனூர் பகுதியில்

செங்கரும்பு நடவு பணி தீவிரம்

சின்னமனூர், ஏப்.25: சின்னமனூர் பகுதியில் செங்கரும்பு நடவு பணி துவங்க இருப்பதால் நிலங்களை பண்படுத்தியதால் விதை கணைகளை பிளாஸ்டிக் வைத்து மூட்டைகளாக வரிசையாக வைத்து நடவு பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

சின்னமனூர் மார்க்கையன் கோட்டை சாலை சிவகாமியம்மன் கோயில் பகுதியில் துவங்கி சீலையம்பட்டி, கோட்டூர் வரை சுமார் 200க்கும் மேற்பட்ட ஏக்கர் அளவில் தமிழர் திருநாள் தைப்பொங்கலுக்கு சிறப்பு விவசாயமாக செங்கரும்பு சாகுபடி தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. சின்னமனூர் பகுதியில் பாயும் முல்லை பெரியாற்று பாசனத்தில் நான்காயிரம் ஏக்கர் அளவில் ஏற்கனவே இருபோகம் நெல் சாகுபடி விவசாயம் நடைபெற்று வருகிறது.

இதில் ஒரு பகுதியாக வயல்வெளிகளில் 200 ஏக்கருக்கு மேல் செங்கரும்பு சாகுபடியில் ஏற்கனவே கடந்த ஜனவரியில் அறுவடை முடித்தனர். நடப்பாண்டு சித்திரையில் செங்கரும்பு நடவு செய்து சாகுடி செய்வதற்காக வயல் வெளியில் ஒரு பகுதியில் நடவிற்காக விதை கரும்புகள் விடப்பட்டிருந்தனர்.

மேலும் பல விவசாயிகள் வெளி மாவட்டங்களில் இருந்து கரும்பு விதை கணைகள் கொள்முதல் செய்து தற்போது வயல் வெளிகளில் வைத்து தயாராக இருப்பு வைத்துள்ளனர். தற்போது அந்த வயல்வெளிகளை பண்படுத்தும் விதமாக ஜே.சி.பி இந்திரம் கொண்டு மண்ணை உழுது சீரமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று முடிந்துள்ளது. சித்திரை பிறந்துள்ள நிலையில் முதல் வாரத்தில் செங்கரும்புக்கான நடவுக்காக விதை கணைகளை சாக்கு மூட்டைகளின் மூலம் அடுக்கி வைத்து படிப்படியாக நடவு துவங்க இருக்கிறது.

▶ சின்னமனூரில் செங்கரும்பு சாகுபடிக்கு விதை கணைகள் வயலில் வைக்கப்பட்டுள்ளது.

டிஏபிக்கு மாற்றாக காம்ப்ளக்ஸ், சூப்பர் பாஸ்பேட் பயன்படுத்தலாம்

வேளாண் துறையினர் அறிவுறுத்தல்

கம்பம், ஏப். 25: தேனி மாவட்ட விவசாயிகள் டிஏபி உரத்திற்கு மாற்றாக காம்ப்ளக்ஸ் மற்றும் சூப்பர் பாஸ்பேட் உரங்கள் பயன்படுத்தலாம் என வேளாண்மை துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது: உரம் என்பது விலை நிலத்தில் உள்ள ஊட்டச்சத்துகளை பெருக்கும் பொருட்டு இடப்படுவதாகும். மண்ணில் குறைந்து வரும் இயற்கையான சத்து பொருட்களை ஈடு செய்யும் பொருட்டு செயற்கையான சத்து பொருளை மண்ணுக்கு ஊட்டுவது உரம் இடுதல் ஆகும். சாதாரணமாக மண்ணில் நைட்ரஜன், பொட்டாஷ், பாஸ்பரஸ், மெக்னீசியம், கந்தகம், இரும்பு முதலிய வேதியல் பொருட்கள் கலந்துள்ளன. இவையே, தாவரங்களுக்கு தேவையான வேதியியல் சத்து பொருட்கள் ஆகும்.

காற்றில் இருந்தும் சத்து சேமிப்பு: காற்றில் இருந்தும் கூட, சத்து பொருட்களை தாவரங்கள் சேமித்து வளர்கின்றன. தாவரத்தின் தண்டும், இலைகளும் நன்கு வளர்ச்சி பெற நைட்ரஜன் பொருட்கள் பெருந்துணை புரிகின்றது. தாவரங்களுக்கு நோய் ஏதும் வராமல் காக்கும் கேடயமும் இதுவேயாகும். பூக்கள் பூத்து குலுங்கவும், காய்கள் நன்கு திரட்சியடையவும், விதைகள் முதிர்வு பெறவும் பாஸ்பேட்டுகள் அவசியம். அதேபோல் வேரும், பழமும், வித்தும் திரட்சி பெற பொட்டாஷ் என்னும் சாம்பல் சத்து இன்றியமையாத தேவையாகும். சத்து இழக்கும் மண்ணுக்கு வளமூட்ட இயற்கை உரங்களின் தன்மைகளை கொண்ட செயற்கை உரங்களை வேதியியல் அடிப்படையில் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுவதே, செயற்கை உரங்கள் ஆகும். உற்பத்தியை பெருக்க நல்ல தரமான விளைபொருட்கள் கிடைக்க செயற்கை உரங்கள் பெருமளவில் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

டிஏபி தயாரிப்பு செலவு அதிகரிப்பு: உரம் தழை (நைட்ரஜன்), மணி (பாஸ்பரஸ்), சாம்பல் (பொட்டாசியம்) ஆகிய முக்கிய முதல் நிலை பேரூட்ட கனிம சத்துகளையும், கால்சியம், மெக்னீசியம், கந்தகம் ஆகிய இரண்டாம் நிலை ஊட்டச்சத்துகளையும் இரும்பு, துத்தநாகம், போரான், தாமிரம், மாங்கனீசு, மாலிப்டினம் போன்ற தாது பொருட்களையும் நிலத்திற்கு தருகிறது. நிலத்தின் தன்மை விளைவிக்கப்படும், பயிரின் இயல்பு தட்பவெட்ப சூழ்நிலை ஆகிய வற்றை பொறுத்து தேவைப்படும் சத்தை எவ்வகை உரத்தின் மூலம் பெறுவது என்பது தீர்மானித்து அவ்வகை உரத்தை நிலத்திற்கு இடவேண்டும். தமிழ்நாட்டில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரும்பாலும் டிஏபி உரத்தினையே, அடிஉரமாக பயன்படுத்துகிறார்கள். டிஏபி உரம் தயாரிப்புக்கு தேவைப்படும் மூலப்பொருளான பாஸ்பாரிக் அமிலத்தின் விலை அகில உலகளவில் அதிகரித்து கொண்டே செல்கிறது. உள்நாட்டில் டிஏபி உர உற்பத்தி குறைந்து பெரும்பாலான டிஏபி உரங்கள் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இறக்குமதியின் போது, சில நேரங்களில் கப்பல் பற்றாக்குறை அல்லது துறைமுகங்கள் இடநெருக்கடி போன்ற காரணங்களினால் டிஏபி உரத்தை துறைமுகத்தில் இறக்கி மாவட்டங்களுக்கு அனுப்புவதில் சில சமயம் தாமதம் ஏற்படுகிறது.

காம்ப்ளக்சில் கந்தக சத்து 13%: எனவே, அதிக விலைக்கு விற்பனையாகும் டிஏபி உரத்திற்கு மாற்றாக பயிர் சாகுபடிக்கு சூப்பர் பாஸ்பேட் மற்றும் காம்ப்ளக்ஸ் உரத்தை தமிழ்நாடு வேளாண் துறை பரிந்துரை செய்கிறது. பயிருக்கு தேவையான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துகள் அனைத்தும் என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரத்தில் அடங்கியுள்ளது. சூப்பர் பாஸ்பேட் உரத்தில் 16 சதவீதம் பாஸ்பரஸ், சல்பர் 12 சதவீதம், கால்சியம் 21 சதவீதம், போன்ற கூடுதல் சத்துகள் கிடைக்கிறது. மேலும், சூப்பர் பாஸ்பேட் உரம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுவதால் விலை குறைவு. 50 கிலோ டி.ஏபி உரத்தில் 9 கிலோ தழைசத்து, 23 கிலோ மணிச்சத்து கிடைக்கிறது. இதே அளவு சத்தை மூன்று வழிகளில் ஏதேனும் ஒரு வழிகளை பயன்படுத்தி பெறலாம். மூன்று மூட்டை சூப்பர் பாஸ்பேட் (150 கிலோ) மற்றும் 20 கிலோ யூரியா. 20:20:0:13 காம்ப்ளக்ஸ் ஒரு மூட்டை (50 கிலோ) மற்றும் 75 கிலோ சூப்பர் பாஸ்பேட். 16:20:0:13 காம்ப்ளக்ஸ் ஒரு மூட்டை (50 கிலோ) மற்றும் 75 கிலோ சூப்பர் பாஸ்பேட். பயிரின் வளர்ச்சிக்கு அவசியம் தேவைப்படும் கந்தக சத்து காம்ப்ளக்ஸ் உரத்தில் 13 சதவீதம், சூப்பர் பாஸ்பேட் உரத்தில் 12 சதவீதம் உள்ளதால் பயிரின் வளர்ச்சியும், மகசூலும் அதிகரிக்கும். இதனால், டிஏபி இட்ட வயலை போன்றே பயிர் வளர்ச்சி செழித்து விளைச்சலும் அதிகரிக்கும்.

இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

ரேஷன் கடையில் முறைகேடு

2 அதிகாரிகள் மீது நடவடிக்கை

மூணாறு, ஏப்.25: கேரளா மாநிலம் இடுக்கி மாவட்டம் இடமலைகுடி ஊராட்சியில் உள்ள ரேஷன் கடைகளில் நடைபெற்ற அரிசி மோசடி தொடர்பாக, இரண்டு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பழங்குடியின மக்கள் வசிக்கும் மாநிலத்தில் ஒரே ஒரு ஊராட்சியான இடமலைகுடியில் கடந்த ஒரு மாதமாக ரேஷன் அரிசிக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வந்தது. இது குறித்து பொதுமக்கள் அளித்த புகார்களைத் தொடர்ந்து, மாநில உணவு ஆணையத் தலைவர் டாக்டர் ஜினு ஜகாரியா உம்மன் தலைமையிலான அதிகாரிகள் குழு நேரடியாக களஆய்வு மேற்கொண்டது. இதில் அங்குள்ள ரேஷன் கடையில் நடத்தப்பட்ட ஆய்வில், அதிர்ச்சியூட்டும் முறைகேடுகள் வெளிச்சத்திற்கு வந்தன.

சுமார் 65 மெட்ரிக் டன் அரிசி உள்ளிட்ட உணவு தானியங்கள் காணாமல் போயுள்ளன. தானியங்கள் கடைக்கு வந்ததற்கோ அல்லது விநியோகம் செய்யப்பட்டதற்கோ எந்தவித முறையான ஆவணங்களும் இல்லை. அடிப்படைப் பதிவேடுகளும் மாயமாகியுள்ளன. எவ்வித விதிகளையும் பின்பற்றாமல் பல ஆண்டுகளாக இந்த ரேஷன் கடை இயங்கி வந்துள்ளது.

இங்கு பல ஆண்டுகளாக நடந்து வரும் மோசடிகளைக் கண்டறியவோ அல்லது ஆய்வு செய்யவோ சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்பது விசாரணையில் உறுதியானது. குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட ரேஷன் கடைகளுக்குச் சென்று ஆய்வு செய்ய அதிகாரிகள் முன்வரவில்லை என்று விசாரணை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

ரேஷன் பொருட்களை முறையாக விநியோகம் செய்யாமல் கையாடல் செய்ததன் மூலம் அரசுக்கு சுமார் ரூ.26.99 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் ஏற்கனவே விநியோகப் பொறுப்பில் இருந்த கிரிஜன் சொசைட்டி செயலாளர் மீது மூணாறு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அதனைத் தொடர்ந்து, தங்களது கண்காணிப்புப் பணியைச் சரிவரச் செய்யாமல் கடமை தவறிய சிவில் சப்ளை துறை அதிகாரிகள் இருவர் மீதும் தற்போது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அதிரடி நடவடிக்கை, அரசு பணிகளில் அலட்சியமாக இருக்கும் மற்ற அதிகாரிகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

▶ இடமலைகுடியில் உள்ள ரேஷன் கடை.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா டரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலக அலகு: 2 ஆவது தளம், டிகேஎஸ் டவர்ஸ், எண்.P/1/45/4, தேனி-கம்பம் பிரதான சாலை, டீன்பிஎச் எதிரில், பழனிச்செட்டிபட்டி.தேனி, தமிழ்நாடு-625531

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 இன் கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின்** (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 மற்றும் 9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 11.05.2026 தேதியன்று** மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண். HL00494100000005004226 செல்லதுரை B, (கடன்தாரர்) ராதிகா C (உப கடன்தாரர்)	மொத்த நிலுவைத் தொகை: 07.01.2025 தேதியின்படி ரூ.21,26,407 (ரூபாய் இருபத்தொரு லட்சத்து இருபத்து ஆறாயிரத்து நானூற்று ஏழு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 13.3% வட்டி.	கையக	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், உத்தமபாளையம் துணைப் பிரிவு, கோகிலாபுரம் கிராமம், வார்டு எண்.4, வடக்கு தெரு, பழைய கதவு எண். W4/75, தேனி, தற்போது வார்டு எண்.4, தெரு எண்.4 (வடக்கு தெரு), புதிய கதவு எண். W4/61 இல் உள்ள வீட்டின் நான்கு எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. வடக்கு: சாலை, கிழக்கு: வெள்ளைத் தேவருக்குச் சொந்தமான நிலம், மேற்கு: அருந்ததியர் கோவில் தெற்கு: சாலை. இந்த எல்லைகளுக்குள் ¾ அடி இடது பக்கத்தின் கிழக்கு பகுதியில் இந்த நிலத்தின் பரப்பளவு 1047.95859 ச.அடியாகும். கிழக்கு மேற்காக வடக்கு பக்கம். 6.6 மீட்டர் அல்லது 21.7843 அடி. இதன் வடக்கு தெற்காக மேற்கு பக்கத்தில் 15.2 மீட்டர்கள் அல்லது 49.10425 அடியாகும். கிழக்கு பக்கத்தில் 14.6 மீட்டர்கள் அல்லது 47.10803 அடியாகும். மொத்தம் 1047.95859 ச.அடியாகும். மேற்கூறிய நிலத்தில் 1012 ச.அடியில் கட்டப்பட்டுள்ள ஆர்சிசி வீடும் மற்றும் முதல்தளத்தில் 460 ச.அடியில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும் உள்ளது. இந்த வீட்டில் கதவுகள், ஜன்னல்கள், எண்.0554401179–ஐ கொண்ட மின்சார இணைப்பும், எண்.34–ஐ கொண்ட தண்ணீர்க் குழாய் இணைப்பும் உள்ளது. நான்கு சுவர்களுக்குள் அடங்கியுள்ள இந்த நிலத்தில் சாக்கடை அமைப்பும் உள்ளது. கழிவறை மற்றும் மழை நீர் செல்லும் வழி உள்ளது. அனைத்து பொது பாதைகளும் உள்ளடங்கியது. இந்த சொத்து முன்னதாக கோகிலாபுரம் பஞ்சாயத்து எல்லை, நத்தம் சர்வே எண்.640/10 (பழைய எண்.41/1) இல் உள்ளது.	Rs. 1100000.00/- (ரூபாய் பதினொரு லட்சம் மட்டும்)	Rs. 110000.00/- (ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	09-05-2026 Before 5 PM	10,000/-	02-05-2026 (11AM – 4PM)	11-05-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கையாள்கிடப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக கிரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்– **ஆக்சன் புரசீட்ஸ் A/C என்ற** வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஜசிஜசிஇ பேங்க் லிமிடெட், பன்ச்சில் டெக் பார்க், நியூ கணபதி சௌக், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 09.05.2026 அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை முகவரி: 2 ஆவது தளம், டிகேஎஸ் டவர்ஸ், எண்.P/1/45/4, தேனி–கம்பம் பிரதான சாலை, டீன்பிச் எதிரில், பழனிச்செட்டிபட்டி.தேனி, தமிழ்நாடு–625531, மேலும் செல்பேசி எண்.+91 8281138143, மின்னஞ்சல் முகவரி p.adith@grihumhousing.com தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர் / உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்களள் (பதினைந்து) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 25.04.2026, இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...

தினகரன்

890415677 7

9.30 AM - 6.00 PM